**வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கி -2020**

---

**1.1 அபிப்பிராயம்**

வரையறுக்கப்பட்ட இலங்கை சேமிப்பு வங்கியின் ("வங்கி") 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

வங்கியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் மற்றும் அதன் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, வங்கி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது வங்கியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் வங்கியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு வங்கி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு வங்கிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வங்கியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் வங்கி இணங்கியிருந்ததா என்பதும்,

- வங்கி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வங்கியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| கணக்காய்வு விடயம் | பரிந்துரை | முகாமைத்துவ கருத்துரை | முகாமைத்துவ கருத்துரை | சிபாரிசு | பரிந் |
|---|---|---|---|---|---|

(i) பௌதீக உறுதிப்படுத்தலின் பிரகாரம் இருந்த எழுதும்பொருட்களின் றெுமதியானது மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் கொடுக்கப்பட்ட பெறுமதியுடன் வித்தியாசப்பட்டது.

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் (ரூபா) | உறுதிப்படுத்தல் அறிக்கையின் பிரகாரம் (ரூபா) | வித்தியாசம் (ரூபா) |
|---|---|---|---|
| இருப்புக்கள் | 1,349,941 | 1,462,352 | 112,411 |

**முகாமைத்துவ கருத்துரை:** இணங்கப்பட்டது. எழுதும்பொருட்களின் பௌதீக உறுதிப்படுத்தல் உரிய திணைக்களத்துடன் மேற்கொள்ளப்படுவதுடன் தவறானது உடனடி விளைவுடன் திருத்தப்படும்.

**சிபாரிசு:** இருப்புக்களை பராமரித்தலுடன் தொடர்புடைய உள்ளக கட்டுப்பாடுகள் திருப்திகரமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ii) பின்வரும் கடன் வகைகளின் நிதிக்கணக்குகளின் பிரகாரமான மீதிகள் பிரயோக முறைமையிலுள்ள மீதிகளுடன் வித்தியாசப்பட்டது.

| கடன் வகை | நிதிக்கணக்குகளின் பிரகாரம் மீதிகள் ரூபா | பிரயோக முறைமையின் பிரகாரம் மீதிகள் ரூபா | வித்தியாசம் ரூபா. |
|---|---|---|---|
| வாடகைக் கொள்வனவு | 109,184,202 | 109,154,922 | 29,280 |
| குத்தகை | 412,380,393 | 412,265,495 | 114,898 |
| அடகுவைத்தல் | 38,606,533 | 39,105,049 | (498,515) |

**முகாமைத்துவ கருத்துரை:** முறையிலுள்ள பிழையால், வாடகைக் கொள்வனவு வருமதிக் கணக்கில் முடிவுறுத்தல் பதிவு சரியாக பதிவிடப்பட்டிருக்கவில்லை. இந்தப் பிழையானது 2021 ஆம் ஆண்டின் இறுதியில் இனங்காணப்பட்டு திருத்தப்பட்டது. முறைமைப் பிழையினால், குத்தகை வாடகை வருமதிக் கணக்கில் பெறுகைக் பதிவும் சரியாக பதிவிடப்பட்டிருக்கவில்லை. ஆனால், இது பிரயோக மட்டத்தில் சரியாக செய்யப்பட்டிருந்தது. இந்தப் பிழையானது 2021 ஆம் ஆண்டின் இறுதியில் இனங்காணப்பட்டு திருத்தப்பட்டது.

**சிபாரிசு:** பிரயோக முறைமை மற்றும் பொதுப் பேரேட்டிற்குமிடையில் இணக்கப்படுத்தல் வங்கியால் காலரீதியில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### 1.5.2 தொங்கல் கணக்குகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | சிபாரிசு |
| --- | --- | --- |
| (i) பீஎஸ்டிபீ வாடிக்கையாளர்கள் (எல்லை) கணக்கிற்கு செலுத்த வேண்டிய (வைப்புக்கள்) கணக்கில் ரூபா 258,700 இனங்காணப்படாத மீதியொன்று உள்ளடக்கப்பட்டிருந்தது. | குறிக்கப்பட்டது. | மீதிகளை இனங்காணும் செய்முறையானது வலுப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) பின்வரும் இனங்காணப்படாத மீதிகள் தீர்க்கப்படாமல் ஏனைய பொறுப்புக்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தது.<br>(iii)<br>**தொகை (ரூபா)**<br>இனங்காணப்படாத வைப்புக்கள் 308,150<br>தொங்கல் வாடிக்கையாளர்கள் 189,955<br>தொங்கல் கணக்கினைத் தீர்த்தல் 581,290<br>தொங்கல் கணக்கு கடன் கொடுத்தோர் 34,341<br>தொங்கல் கணக்கு இடம்பெயர்ந்த கடன் கொடுத்தோர் 5,575<br>தொங்கல் கணக்கு இனங்காணப்படாத வங்கி வைப்பு கணக்கு 4,657,371<br>முற்பண சேகரிப்பு 9,039,400 | இந்த மீதிகள் நீண்ட காலப்பகுதிக்கு மாற்றப்படாதிருந்தது. ரூபா 4,657,371/- தொகையான இனங்காணப்படாத வங்கி வைப்பு தொங்கல் கணக்கு இனங்காணப்படாத வாடிக்கையாளர் நேரடி வங்கி வைப்பாகவுள்ளது.<br>ரூபா 9,039,400/- தொகையான முற்பண சேகரிப்பு – எம்எவ் பங்காளர் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட முற்பண கொடுப்பனவாகவுள்ளது. 30.09.2021 இல் உள்ளவாறான நடைமுறை மீதி ரூபா 3,210,339/- ஆகவுள்ளது. | மீதிகளை இனங்காணும் செய்முறையானது வலுப்படுத்தப்பட வேண்டும். |

(iv) பின்வரும் கடன்கள் மற்றும் முற்பணங்கள் முறைமையில் செயற்பாடற்ற கடன்களாக வகைப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், முகாமைத்துவத்தின் விளக்கத்தின் பிரகாரம், அத்தகைய கடன்கள் தீர்க்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டிருந்தது. இந்த தீர்ப்பனவுகள் தொடர்பாக சான்றுகள் எதுவுமிருக்கவில்லை.

| ஒப்பந்த இலக்கம் | உற்பத்தி வகை | மூலதன தொகை | வட்டி தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. | ரூபா. |
| எச்ஓஎவ்பீஎல் 130000029 | தனியார் | 250,000 | 19,345 | 269,345 |
| எச்ஈடிஎல்ஈ130 00288 | குத்தகை | 220,000 | 83,082 | 303,082 |
| எச்ஈடிஎல்ஈ120 000148 | குத்தகை | 210,000 | 79,305 | 289,305 |

இந்த வசதிகள் பௌதீகரீதியில் வழங்கப்படாததுடன் புதிய முறைமையின் அமுல்படுத்தலில் பரீட்சிப்பாக செயற்படுகிறது. இது பரீட்சிப்பு நோக்கங்களிற்காக மாத்திரம் உருவாக்கப்பட்டதால் முறைமை வழங்குனர்களால் முடிவுறுத்தப்பட்டது.

இந்த மீதி வகைகள் நேரடி முறைமையில் உள்ளடக்கப்படமாட்டாது.

### 1.5.3 முறையற்ற பெறுமதியிடல் அல்லது மதிப்பீடு

**கணக்காய்வு விடயம்**

(i) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், பின்வரும் சொத்துக்கள் முழுமையாக பெறுமதிசெய்யப்பட்டு தற்போதும் பயன்படுத்தப்படுகின்றது. அவற்றை மீள்மதிப்பிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**முகாமைத்துவ கருத்துரை**

குறித்துக்காட்டப்பட்ட சில சொத்துக்கள் பீஎஸ்டிபீ மற்றும் என்டிரீஎவ் இன் உரித்தாக்கல் மற்றும் ஆரம்பத்திலிருந்து நீண்ட காலமாக வங்கிக்கு மாற்றப்பட்டது. மோட்டார் வாகனங்கள் காப்புறுதி நோக்கங்களிற்காக மாத்திரம் மீள்மதிப்பிடப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. வங்கிக்கு கிரயத்தை ஏற்படுத்தும் என்பதால் ஏனைய நிலையான

**சிபாரிசு**

ஏல்கேஏஸ் 16 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம், 3 தொடக்கம் 5 வருடங்கள் காலப்பகுதியில் சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வது அவசியமாகவுள்ளது.

| சொத்து | பிரிவுகளின் எண்ணிக்கை | புத்தகப் பெறுமதி |
|---|---|---|
| ---------- | ------------------- | ---------------------- |
| | | (ரூபா) |
| மோட்டார் வாகனம் | 19 | 44,241,186 |
| கணனி உபகரணம் | 207 | 37,504,012 |
| தொலைபேசி உபகரணம் | 53 | 697,318 |
| தளபாடம் மற்றும் உதிரிப்பாகங்கள் | 212 | 12,514,634 |
| மீள்-வழங்குதல்கள் | 111 | 6,495,253 |
| அலுவலக உபகரணம் | 144 | 11,489,463 |
| ஏனைய சொத்துக்கள் | 158 | 11,990,985 |

சொத்துக்கள் மீள்மதிப்பிடப்பட்டிருக்கவில்லை. கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் இது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. வெளியகற்றலில், முறையான மீள்மதிப்பீட்டு செய்முறை இந்த விடயங்களை அகற்றுவதற்கு பின்பற்றப்படுகின்றது.

**1.5.4 நிறுவனத்தின் தொடந்து செல்லும் எண்ணக்கரு**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வை பணிப்பாளரின் 2021 சனவரி 05 ஆந் திகதிய 02/19/319/0001/004 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், வங்கியானது 2021 செப்தெம்பர் 30 அளவில் முடிவுறுத்தவோ அல்லது தேசிய சேமிப்பு வங்கியுடன் (என்எஸ்பீ) ஒருங்கிணைக்கின்றது. எனினும்,<br>i. 2020 திசெம்பர் 31 இன் இறுதியிலுள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவின் கீழ் எந்தவொரு வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>ii. முகாமைத்துவத்தின் பிரதிநிதித்துவப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம், ‘‘சபையின் இயலுமையானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொடருவதற்கு முக்கிய சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் நிகழ்ச்சிகள் அல்லது நிலைமைகள் தொடர்பில் பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கவில்லையென குறித்துக்காட்டப்பட்டது. | பணிப்பாளர் - இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வை 2021 சனவரி 05 ஆந் திகதிய அவருடைய கடிதத்தின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையானது எஸ்எல்எஸ்பீயினை என்எஸ்பீயுடன் முழுமையாக ஒருங்கிணைப்பதற்கு கொள்கைத் தீர்மானத்தை எடுத்திருந்தது. அதற்கிணங்க, புதிய கடன்களை வழங்கல், வைப்புக்களை ஏற்றுக்கொள்ளல், புதிய உத்தியோகத்தர்களை வேலைக்கமர்த்தல் மற்றும் ஏனைய தரப்பினருடன் புதிய ஒப்பந்தங்களில் ஈடுபடுதல் போன்றவற்றைத் தவிர்த்து எஸ்எல்எஸ்பீ ஐ நெறிப்படுத்துவதற்கு நாணய சபையால் தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆகையால், சொல்லப்பட்ட கொள்கைத் தீர்மானமானது ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் உதாரணமாக 2020 திசெம்பர் 31 இல் எடுக்கப்பட்டிருந்தது ஆனால், இந்த நிகழ்ச்சியானது குறிப்பு இலக்கம் 39 - அறிக்கையிடல் திகதிக்குப் பின்னர் அறிக்கையிடப்பட்டிருந்தது.<br>எஸ்எல்எஸ்பீயின் தலைமையான தேசிய சேமிப்பு வங்கியானது, எஸ்எல்எஸ்பீயினை என்எஸ்பீயுடன் முழுமையாக ஒன்றிணைப்பதற்கு மத்திய வங்கி நடவடிக்கை எடுக்கும் என அறிவித்திருந்ததுடன் என்எஸ்பீயானது ஒருங்கிணைப்பு செய்முறையை முடிவுறுத்தும் வரை எஸ்எல்எஸ்பீயின் அதனுடைய வணிக செயற்பாடுகளை செயற்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியை கேட்டுக்கொண்டது. | வணிகத்தின் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவை பாதிக்கின்ற ஐந்தொகைக்குப் பிந்திய நிகழ்ச்சியொன்றிருந்தால் வங்கியானது தொடர்ந்துசெல்லும் எண்ணக்கரு கொள்கையின் கீழ் வெளிப்படுத்த வேண்டும். அதற்குமேலதிகமாக, முகாமைத்துவமானது அதனுடைய பிரதிநிதித்துவக் கடிதத்தில் தொடர்ந்தியங்காமையின் சொல்லப்பட்ட இடரானது அறிவுறுத்தப்பட வேண்டும். |

**1.5.5 கணக்காய்விற்குக் கிடைக்கப்பெறாத ஆவணச்சான்றுகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | சிபாரிசு |
| --- | --- | --- |
| முற்பணமாக செலுத்தப்பட்ட கழிவுகள் மற்றும் பீஎஸ்டிபீக்கு பதிலான வைப்பு நிதியத்தின் முறையே ரூபா 13,376,694 மற்றும் ரூபா 7,098,200 மீதிகள் முழுமையாக காலக்கழிவடைந்திருந்தது. எனினும், அத்தகைய மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வு சான்றுகளிருக்கவில்லை. | பீஎஸ்டிபீ ஊழியர்களின் பணிக்கொடை கொடுப்பனவுகள் தொடர்பிலான சர்ச்சை தொடர்பிலான ரூபா 7,098,200 மொத்த பெறுமதியான இரண்டு மேன்முறையீட்டு வழக்குகள் மேன்நீதிமன்றத்திற்கு முன் நிலுவையிலிருந்தது. மேன்நீதிமன்றத்திற்கு முன் நிலுவையிலுள்ள விடயங்கள் தொடர்பான வழக்குகளின் எண்ணிக்கை பின்வருமாறுள்ளது.<br>• எஸ்சீ/எச்சீ/எல்ஏ/01/2017<br>• எஸ்சீ/எச்சீ/எல்ஏ/01/2017 | சான்றுகள் மற்றும் பகுப்பாய்வுகள் ஒவ்வொரு மீதிகளுக்கும் ஐந்தொகையில் பேணப்பட வேண்டும். |

**1.6 பெற வேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவை**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | சிபாரிசு |
| --- | --- | --- |
| **(i)** முன்னைய ஆண்டுகளிலிருந்திருந்து உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 48,498 தொகையான காசுப் பற்றாக்குறையை அறவிடுவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை | இணங்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் திருத்தப்படும். | இந்த வகையான நிலைமையை தவிர்ப்பதற்கு உள்ளகக் கட்டுப்பாடு செய்முறை தாபிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii) ரூபா 2,866,959 தொகையான வருமதி மீதிகள் பல வருடங்களாக அறவிடப்படாமல் நிலுவையிலிருந்தது. ரூபா 1,999,000 முத்திரைத்தீர்வை வருமதிமீதி மேற்கூறப்பட்ட மீதியில் உள்ளடங்கியிருந்தது. | இணங்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் திருத்தப்படும். எஸ்எல்எஸ்பீக்குரிய காணியை பீஎஸ்டீபீக்கு மாற்றும்போது ரூபா 1,999,000/- முத்திரைத்தீர்வை வரி செலுத்தப்பட்டிருந்தது. இது சொல்லப்பட்ட காணியின் அகற்றலின் போது அறவிடப்பட முடியும். உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்காக இயக்குனர் சபையின் அறிவுறுத்தல்களைப் பெறுவதற்காக ஏனைய விடயங்கள் அனுப்பப்படும். | நிலுவை மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கொடுக்க வேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| (i) பின்வரும் ஏனைய பொறுப்பு மீதிகள் தீர்ப்பனவு செய்யாமல் ஒரு வருடத்திற்கு மேலாக நிலுவையாகவிருந்தது.<br><br>**ரூபா**<br>செலுத்தவேண்டிய வரி- தண்டப்பணம் — 196,424,540<br>பிழை சரிபார்த்தல் சேமிப்புக்கள் — 1,975,871<br>பெறவேண்டியவைகள் - உத்தியோகத்தர் — 268,358<br>பெறவேண்டியவைகள்- சீஆர்ஜபீ கட்டணங்கள் தனியார் கடன்கள் — 32,650<br>முதிர்ச்சி மூலதன தொங்கல் கணக்கு – எவ்டீ — 267,853<br>கடன் பாதுகாப்பு நிதியம் - பிரஜாதிரிஜா — 67,350 | ரூபா 196,424,540.00 செலுத்தவேண்டிய வரி-தண்டப்பணத்தில் ரூபா 24,536,137.29 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் ஏற்கனவே 2021.09.30 இல் உள்ளவாறு பதிவழிக்கப்பட்டிருந்தது.<br>எவ்எஸ் மீதான வற் மற்றும் என்வீரிற்குரிய ரூபா 78,028,303.00 தொகையான தண்டப்பணமானது வங்கியின் இயக்குனர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுத் திட்டம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளரால் இணங்கப்பட்டதன் பிரகாரம் 2021 திசெம்பர் இல் இறுதிக் கொடுப்பனவை மேற்கொண்ட பின்னர் ஐஆர்டியால் பதிவழிக்கப்படும். | நிலுவை மீதிகள் நியாயமான காலப்பகுதியினுள் இணக்கஞ்செய்யப்பட்டு தீர்க்கப்பட வேண்டும். |
| (ii) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 310,520 ஈஎஸ்சீ செலுத்தவேண்டிய மீதி ரூபா 2,507 ஈஎஸ்சீ பெறவேண்டிய மீதி நிதிக்கூற்றுக்களிலிருந்தது. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் கலந்தாலோசித்த பின்னர் 2021 ஆம் ஆண்டில் திருத்தப்படும்.. | இந்த மீதிகள் நியாயமான காலப்பகுதியினுள் இணக்கஞ்செய்யப்பட்டு திருத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (iii) 2020 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு கொடுக்கவேண்டியவைகளின் கீழுள்ள சேமிப்புக்கள் நிலையான கட்டளை கணக்கில் ரூபா 109,885 அசாதாரண எதிர்மறை மீதி உள்ளடக்கப்பட்டது. | இணங்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் திருத்தப்படும். | இந்த எதிர்மறை மீதிகளை வங்கி தீர்க்கப்பட வேண்டும். |
| (iv) 2008 ஆம் ஆண்டின்போது ஊழியர்களிடமிருந்து அவர்களுடைய ஓய்வூதிய நிதியத்திற்காக கழிக்கப்பட்ட ரூபா 1,765,404 தொகையொன்று கொடுக்கவேண்டிய மீதிகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. எனினும், அவர்களுடைய ஓய்வூதியத்திற்கு பின்னரும்கூட அத்தகைய ஊழியர்களுக்கு அப்பணத்தை செலுத்துவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2008 ஆம் ஆண்டின் போது ஊழியர்களிடமிருந்து எவ்வளவு பணம் கழிக்கப்பட்டது என்பதை இனங்காண்பதற்கு முறையான மூலம் எதுவுமிருக்காததுடன், கழிக்கப்பட்ட தொகையை நிரந்தர ஊழியர்களின் பிரேரிக்கப்பட்ட ஓய்வூதிய நிதியத்திற்கு மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் ஓய்வூதிய நிதியத்திற்காக அறிக்கைகள் மற்றும் ஆவணங்களை முறையாக பேணுதல். |

## 1.7 தகவல்தொழில்நுட்ப பொதுக் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | சிபாரிசு |
|---|---|---|
| (i) வங்கியானது திம்பிறிஹஸ்யாயவிலுள்ள மக்கள் வங்கியிலுள்ள தளத்தில் காப்புக்களை பேணியிருந்தது. இது 3 கிலோமீற்றர்களைவிட குறைவாகவுள்ளதுடன் அது பிரதான முறைமையிலிருந்து காப்பு இடத்தின் ஏற்றுக்கொள்ளக்கூடிய துாரத்திலிருக்கவில்லை. | குறிக்கப்பட்டது. நாங்கள் இப்பொழுது டீஆர் தளத்தை வைத்திருக்காமையால் வணிகத்தை தொடங்குவதற்கு சீபீஎஸ்எல் இடமிருந்து அனுமதியைப் பெற்றபின்னர் இதனை உடனடியாக அமுல்படுத்துவதற்கு திட்டமிடுகின்றோம். மேலும், நாங்கள் ஹிறோஜரி வீதியிலுள்ள எங்களுடைய சொற்தக் கட்டிடத்தில் தற்காலிக டீஆர் முறைமையை அமுல்படுத்துவதற்கு ஏற்கனவே ஆரம்பித்தோம். அத்துடன், மக்கள் வங்கி - திம்பிறிஹஸ்யாய கிளை பாதுகாப்புப் பெட்டியில் ஒவ்வொருநாளும் காப்புப்பிரதிகளை பேணுகின்றன. | காப்புப்பிரதி நியாயமான காலப்பகுதியைத் தாண்டி அமைக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ii) வங்கிக்கான இடர் மீட்சி (டீஆர்) தளமானது இருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளப்பட்டு பீஓடிக்கும் அறிவிக்கப்பட்டது. ஒருங்கிணைப்புத் தீர்மானத்தால், ஹிறோஜரிடி வீதிக்கட்டிடத்தில் தற்காலிக டீஆர் தளத்தை அமைப்பதற்கு பீஓடீ அறிவித்திருந்ததுடன் ஏற்கனவே அந்த அமுல்படுத்தலை தொடங்கியிருந்ததுடன் தற்போது பெறுகைகட்டத்திலுள்ளது. | வங்கியானது ஆரம்ப கட்டத்தில் வங்கிக்கான இடர் மீட்சி (டீஆர்) ஐ வைத்திருக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா.275,056,231 தொகை இலாபம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 447,816,707 தொகை ஆனதால் நிதி விளைவுகளில் ரூபா 172,760,476 பெறுமதியான பின்னடைவு அவதானிக்கப்பட்டது. இது சந்தை வட்டிவீதம் 23 சதவீதத்தால் குறைவடைந்தமையால் வட்டிவருமானம் குறைவடைந்தமை மற்றும் 2019 இல் ரூபா 125.8 மில்லியன் தண்டப்பணம் இல்லாமல் செய்தமையால் ஏனைய செயற்பாட்டு வருமானம் (தேறிய) 40 சதவீதத்தால் குறைவடைந்தமை இந்த பின்னடைவிற்குக் காரணமாகவிருந்தது.

### 2.2 முக்கிய வருமானம் மற்றும் செலவான விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

மீளாய்வாண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டின் வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பாக செய்யப்பட்ட பகுப்பாய்வானது அதிகரிப்பு அல்லது குறைப்பு சதவீதத்துடன் கீழ்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| விபரம் | முரண் (ரூபா.) | முரண் % | முரணிற்கான காரணங்கள் |
|---|---|---|---|
| வட்டி வருமானம் | ( 230,336,435) | (23) | சந்தை வட்டி வீதம் குறைவடைகின்றமை |
| வட்டி செலவீனம் | (19,493,659) | (21) | சந்தை வட்டி வீதம் குறைவடைகின்றமை |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 2,473,262 | 149 | கடன்கள் மற்றும் முற்பணங்களிற்கான மற்றும் கடன் வழங்குதலிற்கான கட்டணம் மற்றும் வருமான அறவீடுகள் அதிகரித்தமை. |
| ஏனைய செயற்பாட்டு வருமானம் | (53,877,016) | (40) | 2019 இல் ரூபா 125.8 மில்லியன் தண்டப்பணம் இல்லாமல் செய்தமை. |

| | | | |
|---|---|---|---|
| காலக்கழிவு (கட்டணங்கள்)/ மாற்றுதல் | (64,208,945) | 1,278 | முன்னைய ஆண்டில் காலக்கழிவினை மாற்றுதல் இருந்ததுடன் நிதிச்சொத்துக்கள் காலக்கழிவுக் கிரயத்தில் - கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 57,399,184 காலக்கழிவு கட்டணமொன்றிருந்தது. |

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கப் பெற்ற தகவல்களின் படி மீளாய்வாண்டிற்கான மற்றும் முன்னைய ஆண்டிற்கான வங்கியின் சில முக்கியமான விகிதங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன.

| விபரம் | துறை விகிதம் * (%) | எஸ்எல்எஸ்பீஎல் 2020 (%) | எஸ்எல்எஸ்பீஎல் 2019 (%) |
|---|---|---|---|
| **இலாப விகிதங்கள்** | | | |
| சராசரி உரிமை மூலதன திரும்பல் (ஆர்ஓஈ) | 16.7 | 4.8 | 8.68 |
| சராசரி சொத்து திரும்பல் (ஆர்ஓஏ) | 1.3 | 4.62 | 7.09 |
| தேறிய வட்டி வரம்பு | 3.4 | 7.94 | 10.34 |
| **போதுமான மூலதன விகிதம்** | | | |
| மூலதன போதுமை விகிதம்- ரையர் I (ஆகக்குறைந்தது 5 சதவீதம்) | | 82.04 | 82.81 |
| **சொத்தின் தர விகிதம்** | | | |
| மொத்த செயல்படாத முற்பணம் | | 20.73 | 19.82 |
| **திரவ விகிதம்** | | | |
| திரவ சொத்து விகிதம் | | 511.32 | 514.15 |

* இலங்கை மத்தியவங்கியால் பிரசுரிக்கப்பட்ட தகவல்களிடமிருந்து துறைசார் விகிதம் எடுக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை.

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (i) வங்கியில் ஊழியர்களில் முறையான பிரிவில்லாமை.<br>உதாரணம்: நிதிப்பிரிவிலுள்ள ஊழியர்கள் நீண்ட காலத்திற்காக வாடகை கொள்வனவு மற்றும் குத்தகை நடவடிக்கைகளை கையாளுகின்றனர். | இந்தக் காலப்பகுதியின் போது, வங்கியானது என்எஸ்பீயூடான ஒண்றினைப்பை மற்றும் தேவையற்ற கிரயத்தை குறைக்கும் நோக்கத்துடனான வணிகத் திட்டத்தை இறுதியாக்கும் வரை வரையறையான உத்தியோகத்தரை (107) வேலைக்கமர்த்தி இயங்கியது. ஆகையால், சிரேஸ்ட உத்தியோகத்தர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் தற்காலிக ஏற்பாடாக வங்கியின் முக்கிய தொழிற்பாடுகளின் சுமுகமான செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்காக ஏனைய திணைக்களங்கள்/வணிகப் பிரிவுகளை மேற்பார்வைசெய்ய வேண்டியிருந்தது. | மோசடி நடவடிக்கைகளை தடுப்பதற்கு வங்கி ஊழியர் பிரிவொன்றினைப் பேணுதல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையீன்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (i) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவையாகவுள்ள கடன்கள் ரூபா.3.705 மில்லியன் ஆகவிருந்தது. அதில் ரூபா 1620 மில்லியன் அல்லது 43.7 சதவீதம் செயற்பாடற்ற கடன்களாக (என்பீஎல்) வகைப்படுத்தப்பட்டிருந்தது. 2021 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு மொத்தமாக வழங்கப்பட்ட தொகையிலிருந்து 40 சதவீத்திற்கு மேலாக நிலுவையாக பின்வரும் செயலற்ற கடன்களுள்ளது. | குறித்துரைக்கப்பட்ட வகை கடன் வழங்கலானது வகையின் சிலவருடங்களிற்கு முன்னர் நிறுத்தப்பட்டிருந்ததுடன் தற்போது நிலுவைக்கடனை மாத்திரம் அறவிடுகின்றது. ஆகையால், ஒவ்வொரு வகையின் என்பீஎல் விகிதமானது அதிகரித்திருந்தது. பீஎஸ்டிபீ கலவையினை உரிமையாக்கலுடன், 100% ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. 01.01.2021 இலிருந்து 30.11.2021 காலப்பகுதியின் போது ரூபா 11.87 | முறையான அறவீட்டுச் செய்முறை வங்கியால் பேணப்பட வேண்டும். |

| உற்பத்தியிலான வசதிகள் பெயர் | மொத்தமாக வழங்கப்பட்ட தொகை | 2020.12.31 இல் உள்ளவாறு | | 2021.09.30 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|
| | | மொத்த நிலுவை | என்பீஎல்% | மொத்த நிலுவை | என்பீஎல விகிதம் |
| டோரிலிருந்து டோர் | 15,654,792 | 8,719,517 | 70 | 6,081,746 | 72 |
| ஜசீஎல் | 236,272,040 | 165,552,957 | 42 | 69,856,461 | 46 |
| எம்எவ்டி | 17,033,870 | 11,609,440 | 100 | 11,609,440 | 100 |
| பிரஜாடிறிஜா | 60,440,000 | 22,268,507 | 92 | 20,435,358 | 95 |
| றெப்பியா | 60,075,000 | 53,171,764 | 100 | 53,171,764 | 100 |
| ஸ்வாசக்தி | 9,600,000 | 4,576,399 | 86 | 3,946,518 | 91 |

மில்லியனை உள்ளடக்கி ரூபா 31.84 மில்லியன் தொகை அறவிடப்பட்டிருந்தது.

ரூபா 1449.11 மில்லியன் என்பீஎல் தொகையில் ரூபா 993.71 மில்லியன் என்பீஎல் பிறமுஹா சேமிப்புக்கள் மற்றும் அபிவிருத்தி வங்கி (பீஎஸ்டிபீ) ஆகவுள்ளது. பீஎஸ்டிபீயின் மொத்தக் கலவையானது உரிமையாக்கும் நேரத்தில் என்பீஎல் உள்ளது. எஸ்எல்எஸ்பீயால் வழங்கப்பட்ட கடன்களிலிருந்து உருவாகிய என்பீஎல் ரூபா 455.4 மில்லியனாகவுள்ளது. மேலும், மத்தியவங்கியானது 2021 சனவரி 05 ஆம் திகதியிலிருந்து வங்கியானது புதிய கடன்களை வழங்குவதை நிறுத்தியதுடன் கடன் கலவையானது ரூபா 590.25 மில்லியனால் குறைவடைந்தது. 2020 திசெம்பர் 31 என்பீஎல் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது 2021 நவம்பர் 30 இல் உள்ளவாறான என்பீஎல் எண்ணிக்கை ரூபா 132 மில்லியனால் வங்கி குறைத்திருந்தாலும் கடன் கலவயின் குறைவானது என்பீஎல் விகிதம் அதிகரித்தமைக்கு முக்கிய பங்கு வகித்தது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாகனம் | 2,260,000 | 2,205,993 | 100 | 2,205,993 | 100 |
| நுண்நிதி – மொத்தக் கடன்கள் | 1,790,961,743 | 839,813,694 | 40 | 333,565,569 | 49 |
| பீஎஸ்டிபீ | கிடைக்கப்பெறவில்லை | 998,605,882 | 100 | 998,605,882 | 100 |

(ii) மொத்தமாக வழங்கப்பட்ட கடனுடன் ஒப்பிடும் போது 540 நாட்களுக்கு மேலாக நிலுவையாகவுள்ள பின்வரும் செயற்பாடற்ற கடன்கள் அதிகூடிய சதவீத நிலுவையினைக் காட்டுகின்றது.

| **கடன் வகை** | **540 நாட்களுக்கு மேலாக நிலுவையாகவுள்ளவை** | **மொத்தக்கடன் நிலுவையிடமிருந்தான சதவீதம் (%)** |
|---|---|---|
| ------------------ | ---------------------------- | ----------------------- |
| | **ரூபா.** | |
| டோரிலிருந்து டோர் | 5,219,329 | 66 |
| ஸ்வாசக்தி | 2,762,738 | 63 |
| வாகனம் | 1,562,832 | 100 |
| றெப்பியா | 47,442,189 | 100 |
| பிரஜாடிறிஜா | 16,235,893 | 79 |
| நுண்நிதி அபிவிருத்தி | 9,419,836 | 100 |
| நுண்நிதி | 266,629,257 | 33 |

<u>டோரிலிருந்து டோர், ஸ்வாசக்தி, வாகனம், பிரஜாதிரியா, நுண்நிதி அபிவிருத்திக்கடன்கள் -</u>
வங்கியானது இந்தவகைகளை புதிய கடன்களாக வழங்குவதை நிறுத்தியிருந்ததுடன் அறவீடுகள்/முடிவுறுத்தல் செயன்முறையிலுள்ளது.

<u>றெப்பியா</u>– அரச வழிகாட்டல்களுடன் எல்ரீரீஈ பதவியை புனரமைப்பதற்கு இந்த வசதிகளை வழங்கியிருந்தது. அறவீடுகள் இந்த சூழ்நிலைகளின் கீழ் பின்பற்றப்பட்டுவருகின்றது. வசதிகள் 2012-2013 இல் வழங்கப்பட்டிருந்தது.

முறையான அறவீட்டுச் செய்முறை வங்கியால் பேணப்பட வேண்டும்.